தேதி.01.11.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

SOP.No.164/2024 திருமதி.தமிழ்செல்வி, க/பெ.பாலசுப்பிரமணியன் ம.சா.1

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

07.12.2010ம் தேதியிட்ட அஞ்சல் ஆயுள் காப்பீடு நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.1 ஆகவும், 11.11.2013ம் தேதியிட்ட ஸ்ரீதேவியின் இறப்பு சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.2 ஆகவும், 14.04.2024ம் தேதியிட்ட ஸ்ரீதேவியின் வாரிசு சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.3 ஆகவும், 18.11.2020ம் தேதியிட்ட கமலவேணியின் இறப்பு சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.4 ஆகவும், 24.12.2020ம் தேதியிட்ட கமலவேணியின் வாரிசு சான்று நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.5 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.6 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.7 ஆகவும், 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.8 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

ஸ்ரீதேவி எனக்கு என்ற உறவு முறை என்றால் என்னுடைய தங்கை ஆவார். அவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். அவர்

எப்போது இறந்தார் என்றால் 11.11.2023ம் தேதி இறந்தார். காப்பீடு எந்த வருடம் செய்தார் என்றால் நினைவில் இல்லை. எவ்வளவு தொகைக்கு காப்பீடு செய்தார் என்றால் ஐந்து லட்சம். அதற்காக வாரிசாக யாரை நியமித்தார் என்றால் எனது அம்மாவை நியமித்தார். எனது அம்மா 2020ம் வருடத்தில் காலமாகிவிட்டார். காப்பீடு முதிர்வு தொகை ரூ.9,00,000/-ம் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் தபால் நிலையத்தில் சொன்னார்கள். காப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-ம் என்றும் அதனுடன் முதிர்வு தொகை எவ்வளவோ அதை பெற்றுக்கொள்ள எனக்கு சம்மதம் என்றால் சரிதான். எங்கள் மூன்று பேரைத்தவிர வேறு யாரும் ஸ்ரீதேவிக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.